
அறத்தான் வருவதே இன்பம்

# தமிழ் அறம்



உள்ளே...

ஆசிரியர் தலையங்கம் ................................... 1

நெஞ்சமே அஞ்சாதே நீ!

எது சமுதாயம்?..................................................2

சிலப்பதிகாரம்.....................................................3

மக்கள் சக்தி இயக்கம் .................................... 5

கவிதைகள். ........................................................ 6

சிந்தனை 7 செயல் 9 ஆசிரியர் மரு.த.இராசலிங்கம். ஆகஸ்ட் 2025

**பண்புள்ள தமிழ்நெஞ்சங்களுக்கு வணக்கம்!**

## சா"தீ"யக் கொடுமைகள்!

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்** .....என்று திருவள்ளுவரும்,

**சாதி இரண்டொழிய வேறில்லை**.........என்று ஔவையும்,

**சாதிகள் இல்லையடி பாப்பா**..................என்று பாரதியும்

ஓங்கி உரைத்துச் சென்றுள்ள இந்த நாட்டில், தலைவர்கள் பலரும் சாதிக் கொடுமைகளுக்கு எதிராகக் களம் கண்டு போராடிய இந்த நாட்டில், சமூக நீதிக்கே எடுத்துக்காட்டாக விளங்கும் தமிழ்நாட்டில் இன்னமும் சாதியின் பெயரால் வன்முறைகள் நிகழ்வது, நாம் முழுமையான நாகரிக இனமாக வளரவில்லை என்பதையே காட்டுகிறது. சாதி என்னும் தளைக்குள் எப்படியெல்லாம் மனிதன் சிக்குண்டு உழன்று கொண்டிருக்கிறான் என்பதைக் காணும் போது வேதனைத் தீயில் உள்ளம் வெந்து போகிறது.

உலகமெங்கும் நிறத்தின் அடிப்படையில் இனப் பாகுபாடும், சமூக ஏற்றத் தாழ்வும் இருந்த போதிலும், இந்தியாவைப் போல் கணக்கில் அடங்காத சாதிப் பிரிவுகளும், அதற்குள் பல உட்பிரிவுகளும் எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. தொல்தமிழகத்தில் சாதிக்கட்டமைப்பு இல்லை. செய்யும் தொழில்களின் பெயரால் தங்களை அடையாளப்படுத்தி அழைத்துக் கொண்ட மக்களுக்கிடையே திருமண உறவுக்கான தடையேதும் இருக்கவில்லை. எப்பொழுது இந்தச் சாதிப்பிரிவினை என்ற தீரா நோயும், உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்கின்ற வேற்றுமையும் தமிழ்ச் சமூகத்தில் வேரூன்றியது என்பது தெரியவில்லை.

அறத்தையே வாழ்வியலாகக் கொண்ட ஒரு சமூகத்தில் மதங்கள் பல தோன்றி, மக்களைப் பிளவுபடுத்தியது போல், பல்வேறு சாதிகளும் உருப்பெற்று, மக்களைப் பிளவுபடுத்த, மனித வாழ்க்கை என்பது அறத்தின் வழி நடப்பது என்ற நிலையிலிருந்து தாழ்ந்து, அவரவர் மத, சாதிக் கோட்பாடுகளைப் பின்பற்றுவது, என்ற குறுகிய மனப்பான்மைக்குள் சிக்கிக் கொண்டது. மதமும், சாதியும் சமூக ஒழுக்கமாகப் பார்க்கப்பட்டது. அந்தக் கட்டுப்பாட்டோடு மனிதன் நின்றிருந்தால், அமைதியும், ஒற்றுமையும் நிலைத்திருக்கும். ஆனால், சக மனிதனைத் தாழ்த்துவது மூலம் தன்னை உயர்ந்தவனாகக் காட்டிக் கொள்ள, ஒரு போலியான சமூக அடையாளத்தை தன் வசப்படுத்தி, பிறரை அச்சுறுத்தி வாழ மனிதன் என்று முற்பட்டானோ அன்று வீழ்ந்ததுதான் மனித இனம். அந்த வீழ்ச்சியிலிருந்து மனிதர்களுக்குள் பல முரண்பாடு கள் தோன்ற தோன்ற இன்று நாம் எங்கு வந்து நிற்கின்றோம்? சாதியின் வெறியால், மத வெறியால் நிகழ்கின்ற வன்கொடுமைகள்!

**என்ன செய்ய வேண்டும்** ? சட்டம் போட்டு சாதிகளை ஒழித்துவிட முடியுமா?.அது நடைமுறைக்கு சாத்தியமில்லாத ஒன்று. மனித மனங்கள் திருந்த வேண்டும். அந்தத் திருத்தம் இளம் வயதிலிருந்தே, பள்ளிப் பருவத்திலிருந்தே வந்தாக வேண்டும். இதில் பெற்றோர்களுக்குப் பெரும் பங்கு இருக்கிறது. முதலில் அவர்கள் திருந்த வேண்டும். மனிதனை மனிதனாகப் பார்க்கும் பண்பு வளர வேண்டும். பரந்த மனப்பான்மை வேண்டும். வாழ்க்கையில் நம்மை மேம்படச் செய்வது சாதி உணர்வா, அல்லது மனிதப் பண்புகளும், திறன்களுமா என்ற சிந்தனைத் தெளிவு வேண்டும். சமுதாயம் என்பதே ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்வதுதான். எந்தவொரு சாதியாளரும் இங்கு தனித்து வாழ்ந்துவிட முடியாது.

அடிமைப் பரம்பரை என்றோ, ஆண்டப் பரம்பரை என்றோ இந்த மண்ணில் இன்று எதுவும் கிடையாது. எல்லோரும் இந்த நாட்டின் முன்னேற்றத்துக்காகத் தங்களின் பங்களிப்பைச் செய்துள்ளார்கள். சாதீய உணர்வுகள் மறைந்து, மனிதப் பண்புகள் மேலோங்கட்டும்! நாடும், வீடும் வளம் பெறட்டும்!



........அன்புடன் ஆசிரியர்

## நெஞ்சமே அஞ்சாதே நீ!

டாக்டர். எம்.எஸ்.உதயமூர்த்தி

இத்தனை நாள், எதற்கெடுத்தாலும் கவலைப்படுவது என்று ஒரு வழக்கத்தை வைத்துக் கொண்டு திடீரென்று ஒரு கட்டுரையைப் படிப்பதன் மூலம் கவலைகளை விரட்டிப் புதிய மனிதராய் உலவி விடலாம் என்று சிலர் எண்ணுகிறார்கள், கவலை - சில சமயம் மனப் பழக்கமாய்ப் போய்விடுகிறது. பழக்கம் என்பது சிறிது சிறிதாக நாளடைவில் ஏற்பட்ட ஒன்று. அத்தகைய கெட்ட பழக்கங்களைப் போக்குவதும் சிறிது சிறிதாகச் செய்ய வேண்டிய நாட்பட்ட செயல்தான். கட்டுரை உதவக்கூடும். நாள்பட்ட பயிற்சிதான் அதைப் போக்கக் கூடும்.

கவலைப்படும் போது அத்துடன் பல்வேறு உணர்வுகள் நம்முள் எழுந்து நமது மனநிலையைக் கெடுத்து விடுகின்றன. அப்போதெல்லாம் “ஏன் இப்படித் திடீரென நான் துயரமாகி நிற்கிறேன்” என்று ஒரு கேள்வியை எழுப்பி நமது சிந்தனை ஓட்டத்தைப் பின்னுக்குத் தள்ளினால் நாம் கவலைப்படுவதன் காரணம் விளங்கும். காரணம் தெரியும் போது பரிகாரமும் கண்டறிவது எளிது.

ஒருவனுக்கு ஏராளமானப் பிரச்சனைகள். அவனை ஆறு மாதம் கழித்துச் சந்தித்தபோது அவனது பல பிரச்சனைகள் தீர்ந்து போயிருந்தன. “எப்படி உன் கவலைகள் எல்லாம் பறந்து போயின ?”என்று கேட்டதற்கு, அவன் நிதானமாகப் பதில் கூறினான், “எல்லாம் என் மனத்தில் இருந்தன அவ்வளவுதான்” என்று.



பல கவலைகள் நம் மனத்தில்தான் இருக்கின்றன. நம் கற்பனையில் இருக்கின்றன. பல கவலைகள் மனத்தால் விரிவாக்கம் செய்யப்பட்ட பயங்கள், இயல்பாக நிகழ்ந்து விட முடியாத கற்பனைகள்!

..............நன்றி கங்கை புத்தக நிலையம்

## எது சமுதாயம்?

முனைவர்.லெ.பாஸ்கர்

தீண்டாமை ஒரு பாவச் செயல். என்று பாடப் புத்தகங்களில் அச்சிட்டு, அனைத்து மாணவச் சமுதாயத்திற்கும் சொல்லித் தருகிறோம். ஆனால், நாம் காது கேளாதவர்கள் போல் கடந்து போகிறோம். சாதியைப் பற்றிப் பேசும்போது வாய் பேசத் தெரியாதவர்கள் போல் ஒதுங்கிப் போகிறோம். ஏன் என்றுத் தெரியவில்லை. சில உணர்வுகளுக்கு விடையில்லை. சில சமயங்களில் கேள்வியும் இன்றி சேர்ந்தே வாழ்கிறோம். சேர்ந்தே பயணம் செய்கிறோம். கேள்வியும் பதிலும் இல்லாமல் பார்வையாளர்களாய் வாழ்ந்து மடிகிறோம். சாதிவெறியால் வன்கொடுமைகள்! உயிர்க்கொலைகள்! விடியல் புலப்படவில்லை.

மருத்துவக் கல்வியில் சிறந்த நாடாக இருப்பதில் பெருமையில்லை, மக்கள் பலர் மனநோயாளிகளாக வாழ்கிறார்களே! மனித நேயத்தை, சகோதர மனப்பான்மையை, சக உயிரை மதித்துப் போற்றி வாழ்வது எப்பொழுது?. நாகரிகமும், பண்பாடும் காலம் காலமாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வரும் நாடுதானே ?.சாதிப் பிணக்குகள் நம் மகிழ்ச்சியான வாழ்விற்கு இடையூறாக இருக்கும் போக்கினை அனுமதிக்கலாமா?.

அறச்சிந்தனைகள் வளரச் செய்வதன் மூலமே, சாதிப் பிணக்குகளின் தாக்கத்திலிருந்து நாம் விடுபட முடியும். இணக்கமான உண்மையானச் சமுதாயம் எது என்ற புரிதல் நமக்கு வேண்டும். அந்தப் புரிதல் இல்லாத நிலையின் விளைவே நாம் சந்திக்கின்ற கொடுமையானச் செயல்கள். உண்மைச் சமுதாயம் அறத்தின் வழி இயங்குவது என்ற விழிப்புணர்வை நாம் தொடர்ந்து எல்லா நிலைகளிலும் ஊட்ட வேண்டும். கண்டிப்பாக பள்ளிகளில் நீதிபோதனை வகுப்புகள் மூலம் அதைச் செய்தாக வேண்டும். பண்பாடும், நாகரிகமும் மிக்க நல்லதொரு சமுதாயம் அமைய நாம் அனைவரும் பாடுபட வேண்டும்.



**வஞ்சிக்காண்டம். சேரன் செங்குட்டுவன், வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று ஆரிய மன்னர்களை வென்று, கனக விசயர்களின் தலைகளில் கல்லேற்றிக் கொண்டு வந்து கண்ணகிக்கு சிலை அமைத்த வரலாறு கூறும் பகுதி.** **மரு.த.இராசலிங்கம்**

வஞ்சிக்காண்டத்தின் சுருக்கத்தைக் கவிதை வடிவில் எழுதாமல், உரைநடையாகவே புனைகிறேன். கண்ணகி கொற்றவைக் கோவிலில் தன் கைவளையல்களை உடைத்துவிட்டு, மேற்திசை நோக்கிச் செல்லும் முன்பு, **மதுராபதி** தெய்வம் அவள் முன்னால் தோன்றி, கோவலனின் முற்பிறவி வரலாறைக் கூறுகிறது.

**சிங்கபுரம்** என்னும் சிற்றரசை **“வசு”** என்ற மன்னனும் **கபிலபுரம்** என்னும் சிற்றரசை **“குமரன்”** என்ற மன்னனும் ஆண்டு வருகின்றனர். இரு நாட்டுக்குமிடையே தீராதப் பகை நிலவுகிறது. ஒருநாள் கபிலபுரத்தைச் சேர்ந்த **“சங்கமன்”** என்னும் வணிகன் தன் மனைவி **“நீலி”** என்பவளுடன் அணிகலன்களை விற்பதற்காக சிங்கபுர கடைவீதிக்கு வருகிறான். அவனை ஒற்றன் என நினைத்து சிங்கபுரத்து மன்னனுக்கு நெருக்கமான **பரதன்** என்னும் பெயருடைய கோவலன், மன்னனின் ஆணை பெற்றுக் கொலை செய்துவிடுகிறான். தன் கணவனுக்கு அநீதி இழைக்கப்பட்டதால் சங்கமன் மனைவி நீலி, பரதனுக்கு சாபமிட்டு விட்டு, மலையிலிருந்து விழுந்து இறந்து விடுகிறாள். அவளின் சாபத்தால், ஊழ்வினையால் கோவலன் இப்பிறவியில் கொலையுண்டான் என்ற பண்டைய வரலாறைக் கூறி விட்டு மதுராபதி தெய்வம், கண்ணகியிடம் 14 வது நாளில் உன் கணவனைக் காண்பாய் என்ற செய்தியையும் சொல்லி விட்டு பற்றி எரியும் நெருப்பையும் அணைத்துவிட்டு மறைந்து விடுகிறது.

திருச்செங்குன்ற மலைக்கு வந்துசேர்ந்த கண்ணகி அங்கு வேங்கைமரத்தின் நிழலிலே அழுது கொண்டே நிற்கின்றாள். 14 வது நாளில் கோவலனை வானவர் வடிவிலேக் கண்டு மகிழ்ந்த கண்ணகி, அவனுடன் வானுலகம் செல்கிறாள்.

இந்தக் காட்சியைக் கண்ட திருச்செங்குன்ற மலைவாழ் குறவர்கள், கண்ணகியைத் தங்கள் குலத்தெய்வமாகப் போற்றிக் குரவைக் கூத்தாடுகின்றனர். பின்னர் அவர்கள் கூட்டமாகச் சென்று, மலைவளம் காணவந்த சேரமாமன்னன் செங்குட்டுவனிடமும், குணவாயிற் கோட்டத்தில் தங்கியிருந்த இளங்கோவடிகளிடமும் கண்டக் காட்சியை வியப்பு மேலோங்க சொல்ல, அருகிலிருந்த புலவர் சாத்தனார், தான் அறிந்திருந்த கோவலன்-கண்ணகி வரலாறை விளக்குகிறார். **சேரன் செங்குட்டுவன்** கண்ணகிக்கு கல்நட்டு வழிபட எண்ணம் கொள்கிறான். **இளங்கோவடிகள்** சிலப்பதிகாரம் காப்பியத்தைப் படைக்கிறார்.

கண்ணகிக்குச் சிலைவடித்து வழிபட முடிவு செய்த சேரன் செங்குட்டுவன், தன் மனையாள் வேண்மாளுடனும் கலந்து ஆலோசித்துவிட்டு, சிலை வடிக்கக் கல் எங்கிருந்து கொணர்வது என்பது பற்றி முடிவு செய்ய அமைச்சர்கள் மற்றும் புலவர்களின் கூட்டத்தைக் கூட்டுகிறான்.

இமயமலையில் கல் எடுத்து, அதைக் கங்கையிலும், காவிரியிலும் **நீர்ப்படை** செய்து{ தூய்மை செய்து), சிலை வடிப்பதென முடிவாகின்றது. அப்பொழுது அங்கிருந்த “வில்லவன் கோதை” என்பான், முழங்கும் கடலினை வேலியாக உடைய இப்பாரதப் பெருநாட்டை முழுவதும் தமிழ்நாடாக்க நீ கருதினாய் என்றால் உன்னை எதிர்ப்பவர் யாரும் இல்லை. ஆதலால், வடதிசை மன்னவருக்கெல்லாம், தமிழ்நாட்டுச் செழுமையினை உடைய வில், கயல், புலி ஆகிய கொடிகளைத் தத்தம் நாடுகளிலும் பறக்க விடுமாறு இப்போதே தெரிவிப்போம் என்கிறான்.

**இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய**
**இதுநீ கருதினை ஆயின், ஏற்பவர்**
**முதுநீர் உலகில் முழுவதும் இல்லை,**
**வடதிசை மருங்கின் மன்னர்க்கு எல்லாம்**
**தென்தமிழ் நாட்டுச் செழுவில், கயல், புலி**
**மண்தலை ஏற்ற வரைக ஈங்கு, என ---** என்று இளங்கோவடிகள் குறிப்பிடுவதிலிருந்து, சேரன் செங்குட்டுவன் இமயம் வரை கட்டியாளும் வல்லமைப் பெற்ற வேந்தனாக விளங்கினான் என்பது புலனாகிறது.

அப்போது அங்கிருந்த “அழும்பில் வேள்” என்பான், நமது வடதிசைச் செலவு(பயணம்} குறித்து இங்கு வஞ்சிமாநகரில் பறையறைதலே போதுமானது. அந்தச் செய்தி ஒற்றர்கள் மூலம் வடதிசை மன்னர்களுக்கு எட்டிவிடும் என்கிறான்.

வஞ்சியில் போர்ப்பறை முழங்கியது. ..................... அடுத்த இதழில் நிறைவு பெறும்

# சங்க இலக்கியத்தில் உவமையழகு
## கலித்தொகை -- குறிஞ்சிக்கலி

**நிலவை** உவமையாக அமைத்துப் பாடாதப் புலவர்களே இல்லை என்பது நாமறிந்த ஒன்று. ஆனால், கபிலர் காட்டும் - காட்சிப்படுத்தும் உவமையோ கற்பனையின் உச்சமாக உள்ளது. நிலவைத் “**தேன்கூடு**” என்கிறார் கபிலர். மலையிலே பரண் அமைத்து, தினைக்காவல் புரியும் பெண்கள், அகிற்கட்டையை எரித்து அதன் மணத்தை நுகர்ந்து மகிழ்வது வழக்கம். அவ்வாறு எரிக்கும் போது, எழுகின்ற புகையானது, மேலெழும்பி வான்நிலவை மறைத்து விடுமாம். அதனால் நிலவு ஒளிகுன்றி மலைமுகட்டிலே தங்கியிருக்குமாம்.அந்த நிலவைத் தேன்கூடு என்று நினைத்து அதிலே தேன் எடுப்பதற்குக் கானவர்கள் நூலேணி அமைப்பார்களாம்.
இந்த அழகியக் கற்பனையை,

**அவனும்தான், ஏனல் இதணத்து அகிற்புகை உண்டு இயங்கும்**
**வான் ஊர் மதியம் வரை சேரின், அவ் வரை,**
**“தேனின் இறால்” என, ஏணி இழைத்திருக்கும்.......** என்று பாடுகிறார் கபிலர்.

காதல் நோய் முற்றியக் காதலன், காதலியின் வனப்பை புகழ்ந்துரைத்ததோடு நில்லாமல் அவளைத் தொட்டும் உறவாடுகிறான். அந்த நிலையை எடுத்துரைக்கும் கபிலர், யானைப் பாகனின் ஆணைக்கு அடங்காது கட்டுப்பாடின்றி நடந்து கொள்ளும் ஆண் யானையின் செயலை உவமையாகக் காட்டுகிறார். மேலும், காதலன் தொழுதாலும், தொட்டாலும் அவன் நிலையிலே குறை இல்லை தோழி! என்று காதலி சொல்வதாகக் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

**தொழலும் தொழுதான், தொடலும் தொட்டான்**
**கால் வரை நில்லாக் கடுங்களிறு அன்னோன்**
**தொழூஉம், தொடூஉம், அவன் தன்மை**
**ஏழைத் தன்மையோ இல்லை, தோழி!**

கபிலரின் கற்பனைத் திறன் வியப்பானது. அழகானப் பெண்ணை பல்வேறு விதத்தில் கவிஞர்கள் வருணிப்பதுண்டு. ஆனால், கபிலர் என்ன கூறுகிறார்? தன் உருவிலே வெறுப்புக் கொண்ட கூற்றம்(எமன்), இவ்வாறு அழகுருவம் எடுத்து ஆண்களின் உயிர்களைப் பலிவாங்க உலா வந்ததோ?. இவளைப் பெற்றோர் வீட்டிலே வைத்திருக்க வேண்டாமோ?. வெளியே உலவ விடுதல் கொடுமையல்லவா! என்று கொஞ்சம் வேடிக்கையாகவே கூறுகிறார்.

**.......................................................................வெறுப்பினால்**
**வேண்டும் உருவம் கொண்டதோர் கூற்றம்கொல் ? - ஆண்டார்**
**கடிது இவளைக் காவார் விடுதல், கொடிய இயல்.**

திரைப்படப் பாடலாசிரியர்களுக்கும், கவிஞர்கள் பலருக்கும் படைப்பின் ஊற்று இவை.
........... உவமையழகு தொடரும்

**மரு.த.இராசலிங்கம்**

## மக்கள் சக்தி இயக்கம் சுதந்திரதினவிழா.
## பள்ளி மாணவர்களுக்குக் கட்டுரைப் போட்டி

சுதந்திர தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி, பெரம்பலூர், கரூர், திருச்சி, தஞ்சை மாவட்ட மக்கள் சக்தி இயக்கம் சார்பாக பள்ளி மாணவர்களுக்கு சாலை விதிகளை மதிப்போம், போதை ஒழிப்போம்! புதுப்பாதை காண்போம்! போன்ற தலைப்புகளில் கட்டுரைப் போட்டி நடத்தப்பட்டு, 300 மாணவர்களுக்கு டாக்டர். எம்.எஸ். உதயமூர்த்தி அவர்களின் புத்தகங்கள் மற்றும் மருத்துவர்.த.இராசலிங்கம் எழுதியுள்ள புத்தகங்கள், கவிஞர். கலியுகன் கோபி அவர்களின் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன. மேலும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. போட்டிகளை மாநில நிருவாகிகள் பண்பாளர்கள் முனைவர்.லெ.பாஸ்கர், கே.சி.நீலமேகம், முனைவர். க.பெரியசாமி, அன்பன், வெ.பி.முத்து, இரா.இளங்கோ, வெ.இரா. சந்திரசேகர், மாவட்ட நிருவாகிகள் பண்பாளர்கள் வீ.கந்தசாமி, அ. வன்னியராஜ், க.சிவக்குமார், வாஞ்சிநாதன், செ.வைரமணி, முனைவர். முருகானந்தம், வை.க.முருகேசன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

மேலும் பள்ளிகளுக்கு நிருவாகிகள் நேரில் சென்று மாணவர்களை ஊக்கப்படுத்திப் பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

திருச்சி செந்தண்ணீர்புரம் மாநகராட்சிப் பள்ளியில் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்குப் பணமுடிப்பும் பரிசாக வழங்கப்பட்டது.

***பண்புள்ள தமிழக மக்களே!***

- வளமான வாழ்வுக்கும், உயர்வுக்கும் முழுமையான மதுவிலக்கை, போதைப் பொருள் ஒழிப்பை ஆதரிப்பீர்!
- நல்ல மதுவோ, கள்ள மதுவோ இரண்டுமே உடலுக்கும் உள்ளத்துக்கும் கேடுதான்.
- நல்ல மது என்று அருந்தினால், அது மெல்ல மெல்லக் கொல்லும், கள்ள மதுவோ உடனே கொல்லும்!
- இயற்கைக்கு முரணானது போதை!
- இல்லறத்துக்கு எதிரானது போதை!
- பழிபாவங்களைச் செய்யத் தூண்டுவது மது!<br>நண்பனையும் பகைவனாக்கும் அது!
- உடலையும் கெடுத்து, உயிரையும் பறித்துக் குடும்பத்தை நடுத்தெருவில் நிற்க வைக்கும் மதுவை நாடலாமா?
- மதுவாசனை இந்த மண்ணின் வாசனையாகாமல் தடுப்போம்!

**தமிழ்அறம் மின்னிதழ் வெளியிடுபவர்**
**மரு.த.இராசலிங்கம். MBBS.,Dip.Diab**
**மாநிலத் தலைவர். மக்கள் சக்தி இயக்கம்**
**4/16, இராம் நகர். தூத்துக்குடி.628002**

# திரும்பும் திசையெலாம்....

புழுக்களும்
பூச்சிகளும்
சாக்கடையில்...

காக்கைகள்
கரைவது
கட்டாந்தரையில்...

குதிரைகள்
கனைப்பது
குயிலோசையாகுமா?

மயில்களின்
அணிவகுப்பு
மயக்கப் பிரதிபலிப்பு!

அமைதிப்
புறாக்களுக்கு
தீவட்டி எதற்கு?

அகிம்சைப்
போராட்டத்திற்கு
போர்வாள் அவசியமா?

சங்கின் ஒலி
எழுச்சி கீதம்
விடியல் வானம்!

திரும்பும்
திசையெலாம்
சூரியக் கதிர்கள்!

கவிஞர். கலியுகன் கோபி. சென்னை

# மனிதம் புதைந்தது....

மண்ணில் வாழ்ந்த
மகான்கள் புதையல்
அறமடக்கிய நூல்கள்
ஆகாயம் பறந்ததோ?

பெற்றெடுத்து பெயரிட்டு
பாசமழை பொழிந்த
அன்புத் தெய்வங்கட்கு
ஆசிரமம் தோன்றியதேன்?

கண்முன் அநீதி
காணச்சகியா கொடுமை
காணாமல் நடித்திட
காசாசை தூண்டியதோ?

அரும்பிடா மொட்டுகள்
அழகிய சிட்டுகள்
கசக்கிடும் கயவர்க்கு
கண்மூடி விடுதலையோ?

உதவி உதவியெனும்
ஓங்கார ஒலியிடையே
பதவிப் பேராசையால்
பாய்ந்திடும் புலிகளாலோ?

உள்ளம் மெழுகாக்கி
உருக்கிடும் பேச்சாலே
பள்ளம் தோண்டிடும்
பாவிகள் எண்ணத்தாலோ!

கவிஞர்.ஆசிரியர். க.தேவிகா
தூத்துக்குடி